[4th August 1966

'ஓங்கல்' ஒழிப்பு

*94 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் செய்தி விளம்பரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மீன் வலைகளுக்கு சேதம் விளைவிக்கும் 'ஓங்கல்' என்ற கடல் வாழ் ஜந்துக்களை ஒழிப்பதற்குச் சர்க்கார் எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

கனம் திரு. கோ. பூவராகன் : டால்பின் (Dolphin) என வழங்கப் படும் கடல் விலங்கான 'ஓங்கல்' பாலூட்டி வளர்க்கும் (mammal) மீன் இனமாகும். இது தூத்துக்குடி கடலில் காணப்படுகிறது. மீன் இதன் உணவாகும். மீன் பிடிக்கும் வலைகளை இது சேதப் படுத்துகிறது. இதனை ஒழிப்பது பற்றி மாநில மீனளத் துறை நடவடிக்கை எடுத்து வருகின்றது.

திரு. எம். எஸ். செல்வராஜன் : மஹாராஷ்டிர அரசாங்கம் பம்பாய் கடற்கரையில் இதுபோன்ற சிரமங்களை ஒழிப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுத்து வந்திருக்கிறது என்ற தகவல் நம் அரசாங்கத்திற்குக் கிடைத்திருக்கிறதா ? அப்படியானால், அது பற்றி ஆராய்ந்திருக்கிறதா ? அல்லது விசேஷ அதிகாரி யாரை யாவது அனுப்பியாவது தீர்க்கமாக விவரங்களை அறிந்து காலா காலத்தில் இத்தகைய திட்டத்தை நிறைவேற்ற ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. கோ. பூவராகன் : மஹாராஷ்டிர அரசாங்கம் என்ன செய்கிறார்கள் என்ற தகவல் இல்லை. நாம் இதை ஒழிக்க என்னென்ன முயற்சிகள் எடுக்க வேண்டுமென்று இந்தத் துறையில் முயற்சி எடுத்து வருகிறோம். இதுவரையில் இரண்டு மீன்கள்தான் பிடிபட்டிருக்கின்றன. பிடிபட்டால் அவற்றை எவ்வாறு பயன் படுத்துவது, அதிலிருந்து மீன் எண்ணெய் ஏதாவது தயாரிக்க முடியுமா என்றெல்லாம் நம் ஆராய்ச்சி நிலையத்தில் நம் நிறுவனத் தில் உள்ள அதிகாரிகள் பரிசீலித்து வருகிறார்கள்.

திரு. வை. சங்கரன் : ஓங்கல் என்ற இந்த மீனின் உருவ அமைப்பு எவ்வாறு இருக்கும்? சேதம் விளைவிக்கும் அதன் உறுப்பு எவ்வாறு இருக்கும் என்று அறியலாமா ?

கனம் திரு. கோ. பூவராகன் : அதன் படத்தை வேண்டுமானால் அங்கத்தினர் அவர்களுக்கு அனுப்பி பார்க்கச் சொல்லலாம். அதன் உறுப்புக்களைப் பார்க்கவேண்டுமென்று சொன்னால் எப்போ தாவது ஒரு தடவை, இரு தடவை ஒரு ஆண்டில் கிடைக்கிறது. இப்போதே சொல்லி வைத்து கனம் அங்கத்தினர் பார்வைக்கு ஏற்பாடு செய்யலாம்.